**தலைப்பு 280 – செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்கு வழிகாட்டல்களின் 7.2 மற்றும் 7.10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்படும் வருமானம் கட்டுநிதிக்கான கணக்கிணக்கக் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 3,610,574 தொகையான வருமானம் நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுவனவுகளாக கணக்கிடப்பட்டது. | இணங்கப்பட்டுள்ளது. குறித்த தொகை வருமானமல்லாத பெறுவனவாக இருந்ததால் ரூபா 3,610,574 பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுவனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. வழிகாட்டலின் பிரகாரம் காலக்கிரமத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் திணைக்கள த்தின் வழிகாட்டல் களின் பிரகாரம் நிதிக்கூற்றுக் கள் தயாரிக்கப்ப ட வேண்டும். |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்கு வழிகாட்டல்களின் 7.6 | இணங்கப்படவில்லை. காசுப்பாய்ச்சல் கூற்றானது சுற்றறிக்கைகள் மற்றும் | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் பந்தியின் பிரகாரம் காசு மற்றும் குறுக்கு பதிவுகள் இரண்டையும் கருத்தில் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்றை (ACA-C) தயாரிக்கும் போது நேரடி முறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். திணைக்களத்தால் விரிவாக தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளின் பெறுமதிகள் முறையே ரூபா 8,007,519 மற்றும் ரூபா 7,063,022 ஆக காணப்பட்ட போதிலும் அப் பெறுமதிகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 4,137,380 மற்றும் ரூபா 3,192,882 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 3,870,140 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளைக் காட்டுவதன் மூலம் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், நீங்கள் குறிப்பிட்டுள்ள ரூபா 3,870,140 தொகை தீர்க்கப்பட்ட தொகையாக கருதப்படவில்லை, ஆகையால் குறுக்கு பதிவுகள் மூலம் கணக்கீடு செய்யப்பட்ட பரீட்சை மீதியில் அந்தத் தொகை காட்டப்பட்டது. முற்பண பெறுவனவுகளாக கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்ட ரூபா 7,063,022 தொகை தொடர்பான குறிப்பொன்று காசுப்பாய்ச்சல் கூற்றிலோ அல்லது பரீட்சை மீதியிலோ குறிப்பிடப்படவில்லை. | பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில், முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ், பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெறுதல் ஆகியவற்றின் பெறுமதியாக ரூபா 17,933,943 தொகை காட்டப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டில் அந்த பெறுமதி ரூபா 17,785,943 தொகையாக காணப்பட்டது. ஆகையால் முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 148,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இணங்கவில்லை. திறன் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி ஒரு செயற்பாட்டு நடவடிக்கையாகக் கருதப்படுவதில்லை, ஆனால் நீண்டகால முதலீடாகக் கருதப்படுவதால், ”பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெறுதல்” ஆகியவற்றின் கீழ் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படுகிறது. | காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள ஆண்டின் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல் ஆகியன நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

**(இ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

**கணக்காய்வு அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021/03 ஆம் இலக்க வழிகாட்டலின் 8.3 ஆம் பந்தி | திணைக்களத்தின் வைப்பு கணக்கிணக்க கூற்று 2022 மே 31 வரையிலும் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் காலக்கிரமத்தில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பரிற்கு தேவையான கட்டுநிதிகளின் பெறுமதி திணைக்களத்தால் ரூபா 7,568,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. அதே மாதத்தில், திணைக்களம் திறைசேரியிடம் மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக ரூபா 14,050,000 கூட்டுமொத்தமான கட்டுநிதிகளை கோரியிருந்தது. | இணங்கப்பட்டுள்ளது. எனினும், இது இந்தத் திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட நிதி நடவடிக்கையாகும். வருடத்தின் ஆரம்பத்தில் எமது திணைக்களத்திற்கு மாத்திரம் ரூபா 7,568,000 தொகை கோரப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சிடமிருந்து எமது திணைக்களத்தின் தலைவர் ஊடாக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. ஆகையால் சம்பந்தப்பட்ட மாதத்தில் திறைசேரியிடமிருந்து ரூபா 14,050,000 கூட்டுமொத்தமான கட்டுநிதிகள் கோரப்பட்டிருந்தன. இது படிவம் ACA-2 இல் உள்ள குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. | கட்டுநிதிகளுக்கான மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை<br>ரூபா 2,000,000 தொகையான நிதியேற்பாடு ஒரு செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, இதனால் நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டது. | இணங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல் தொடர்பான கள பரீட்சிப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவினங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேலதிக நிதியேற்பாடு<br>ரூபா 212,000,000 மேலதிக நிதியேற்பாடு 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 05 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதிலிருந்து ரூபா 10,683,314 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது, இதனால் ரூபா 201,316,686 தொகை சேமிக்கப்பட்டது. அந்தச் சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டில் 21-97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | இணங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக அத்தியாவசிய பதவியணியினர் மாத்திரமே கடமைக்கு அழைக்கப்பட்டனர். இந்த எதிர்பாராத சூழ்நிலையின் காரணமாக, 21-97 சதவீத நிதியேற்பாடு மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவினங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் கணனி அச்சீட்டுத் தாளின் பிரகாரம் 04 செலவின விடயங்கள் தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 845,000 கூட்டுமொத்தமாகும். ஆனால், அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,786 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 831,714 பெறுமதி காட்டப்பட்டது. | இணங்கப்பட்டள்ளது. எனினும், அந்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் 2021 திசெம்பரில் CIGAS மென்பொருளில் சரியான நேரத்தில் பதிவு செய்யப்பட்டன, ஆனால் தொழில்நுட்ப சிக்கல் காரணமாக நாளதுவரையாக்கல் செயன்முறை | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடம்பெறவில்லை. தரவுத்தளம் புதுப்பிக்கப்படாததால், CIGAS நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டிற்கான தகவல்களை நாளதுவரை காட்டுகிறது. இந் நிலைமை இந்த திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அந்தப் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாகக் காட்டப்பட்டுள்ளன. | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்று 2021 ஆகஸ்ட் 16 இல் நிறுவப்பட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சிற்குரிய பொறுப்புக்களாக ரூபா 304,172 பெறுமதியை காட்டியது. இது 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு இல. (iii) மற்றும் (iv) மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டுத்தாள் (SA 92) ஆகியவற்றில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து கடப்பாடுகளும் குறிப்பு இல. (iii) இன் கீழ் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ரூபா 120,000 பெறுமதியான கடப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிர்வாக சேவையின் பதவியொன்றில் நியமிக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் 2021 ஆகஸ்ட்டில் பயிற்சிக்காக இணைக்கப்பட்டிருந்தார். இடர் கடன்கள் மற்றும் முற்பண மீதிகளாக அந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 232,858 கூட்டுமொத்த தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 மார்ச் இறுதி வரையிலும் அம் மீதி திணைக்களத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. குறித்த உத்தியோகத்தர் அனுராதபுரத்தில் உள்ள கைத்தொழில் திணைக்களத்தின் நிரந்தர பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அந்தத் திணைக்களத்தின் ஊடாக குறித்த மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படும் என தொலைபேசி மூலம் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளன. | தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றங்களை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் பதிவேட்டின் (CC 10) பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,562 கடன் மீதி முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. ரூபா 7,562 இடர் கடன் மீதி தவறுதலாக கடன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. சரி செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு சரியாக பேணப்பட வேண்டும். |
| (இ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் கடனுக்கான தவணைப்பணம் மற்றும் வட்டி என்பன கடன் வழங்கப்பட்ட மாதத்தினை தொடர்ந்து வரும் மாதத்திலிருந்து உடனடியாக அறவிடப்பட வேண்டும். எனினும் திணைக்களத்தின் 07 உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 710,927 கூட்டுமொத்தமான கடன் மீதியை அறவீடு செய்தல் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக கணக்குப் பிரிவின் பதவியணியினர் வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. இதனால் பதிவேடுகளை பேணுவதில் சிக்கல்கள் இருந்தன, ஆகையால் கடன் தவணைப்பணங்களை முறையாக அறவீடு செய்தல் தடைபட்டது. திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்குரிய கடன் மீதிகளை அறவீடு செய்தல் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பதவி வறிதாக்கப்பட்ட திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 06 வருட | சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களை தொடர்ந்து 2021.07.11 இல் மத்தியஸ்த சபைக்கு உரிய உத்தியோகத்தரால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்த கோரிக்கையை பரிசீலணைக்கு எடுப்பதற்கு குறித்த உத்தியோகத்தர் மீண்டும் | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலமாக ரூபா 139,921 கடன் மீதி பெறப்பட வேண்டியிருந்தது எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணியில் அமர்த்தப்பட வேண்டும். ஆகையால் அவரது தனிநபர் கோவையை ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புமாறு அறிவுறுத்தக் கோரி சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (உ) | செலவினங்களுக்கான ஆகக்கூடிய எல்லை, பெறுவனவுகளிற்கான ஆகக்குறைந்த எல்லை மற்றும் முற்பணக் கணக்குகள் தொடர்பான வரவு மீதிக்கான ஆகக்கூடிய எல்லை என்பன நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட படிவம், ACA-5 இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டள்ளது. சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் காலக்கிரமத்தில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவுகள் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 செயற்பாடுகள் தொடர்பாக எந்த முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஒரு செயற்பாட்டைச் செயற்படுத்த முடியவில்லை. ஏனைய 02 செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய அவசியம் காணப்படாததால் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 03 செயற்பாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்வது 60 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 02 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 60 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.<br><br>தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் NPD/RDD/DCB/2021/General ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொண்டு 12 அறிக்கைகளை வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் நேரமின்மை காரணமாக 03 அறிக்கைகளையே தயாரிக்க முடிந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 298.5 மில்லியன் தொகையான | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய தொற்றுநோய் காரணமாக அத்தியாவசிய செலவினங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செயல்நடவடிக்கைத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாடு செயற்பாடுகள் தெதடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவினம் ரூபா 81.98 மில்லியன் தொகையாக இருந்ததால் ரூபா 216.5 மில்லியன் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | திணைக்களத்தின் முன்மொழியப்பட்ட கணனி மென்பொருளை உருவாக்குவதற்கான பெறுகை செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 வருடாந்த பெறுகை திட்டம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன், வன்பொருள் மற்றும் மென்பொருளுக்காக ரூபா 42 மில்லியன் மற்றும் சேவைகளுக்காக ரூபா 150 மில்லியன் உள்ளடங்கலாக வலைத்தள அடிப்படையிலான செயற்திட்ட கண்காணிப்பு முறைமைக்காக ரூபா 202 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் 2021 சனவரி 4வது வாரத்தில் தொடங்கப்பட்டு, அதே ஆண்டு ஒக்தோபர் முதல் வாரத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், 02 மாதங்கள் தாமதத்திற்குப் பின்னர் 2021 திசெம்பர் 4வது வாரத்தில் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான பெறுகை செயன்முறை கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் மென்பொருளை உருவாக்குவதற்கும் கணனிகளை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 202 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மென்பொருளுக்கான விபரக்குறிப்புரைகளைத் தயாரித்தல், ஒரே மாதிரியான மென்பொருளைப் பயன்படுத்துவது நேரத்தை எடுத்துக்கொள்ளுதல் மற்றும் நீடித்த பெறுகை செயன்முறை போன்ற காரணங்களால் மென்பொருளை உருவாக்குவதற்கான கேள்வியை 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வழங்க முடியவில்லை. இதனால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது. மேலும், பெறுகைத் திட்டத்திற்கிணங்க 2021 ஒக்தோபர் முதல் வாரத்திற்குள் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கொவிட் - 19 தொற்றுநோயின் உலகளாவிய பரவல் காரணமாக கணனி உற்பத்தியில் தாமதம் மற்றும் கணனிகளின் பற்றாக்குறை, நாணயக் கடிதங்களைத் திறப்பதில் தாமதம் மற்றும் சர்வதேச சரக்கு அனுப்புவதில் தாமதம் போன்ற காரணங்களால் இந் நடவடிக்கை 02 மாதங்கள் தாமதமாகியிருந்தது. | எதிர்பார்ப்புக்களை அடைந்துகொள்ளும் வகையில் பெறுகைகள் பட்டியலிடப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை வெளியிடுவதன் மூலம் திணைக்களத்தின் இணையதளம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை இணையதளத்தில் வெளியிட முடியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2022 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் இணையதளத்தில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இணையதளம் முறையாக நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,520,000 பெறுமதியான திணைக்களத்தின் மோட்டார் வாகனம் ஒன்று நிறுவனமொன்றிற்கு முறையாக கையளிக்கப்படாமல் அந் நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | இணங்கப்படவில்லை. நிதி அமைச்சினால் KW 9433 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தை கையகப்படுத்துவது தொடர்பான ஆவணங்கள் இதுவரை இந்தத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாததால் அத்தகைய ஆவணங்களை நிலையான சொத்துப் பதிவேட்டில் இருந்து நீக்க முடியாதுள்ளது. | வாகனங்களை முறையாக ஏனைய நிறுவனங்களிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 31 வெற்றிடங்களுடன் 102 ஆக இருந்தது. அந்த வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலையில் உள்ள 07 பதவிகளையும் இரண்டாம் நிலையில் உள்ள 17 பதவிகளையும் உள்ளடக்கியுள்ளன. | திணைக்களத்தின் வெற்றிடங்கள் தொடர்பில் பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மென்பொருள் ஊடாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இடமாற்றம் செய்யப்படுவதற்கு உத்தியோகத்தர்கள் ஆர்வம் காட்டாததால் வெற்றிடங்களை நிரப்புவது கடினமாக இருந்தது. தற்போதுள்ள பதவியணியினரை பயன்படுத்தி திணைக்களத்தின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செயற்பாட்டிற்கு திணைக்களத்தின் முக்கிய பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். மேலதிக பதவியணியினர் இருந்தால் திருத்தப்பட வேண்டும். |